**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT JUDGE (FAC), SALEM.**

**அமர்வு வழக்கு எண். 301/2017**

**அ. சா. 6**

**பெயர் :திரு. தியாகராஜன்** **: கிராமம்**

**த/பெ. :கோபால்**

**: தொழில்**

**வயது:**

**: மதம்**

**: ஜாதி**

**திரு. S. ஜெகநாதன், B.A, B.L., D.C.A.C.J., முதலாவது கூடுதல் நீதிபதி (முழு கூடுதல் பொறுப்பு) அவர்கள், Solemnly affirmed by Thiru. P.K.Shanmugam, Translator of this court in accordance with the provisions of Oath Act 44/1969, this the 13th day of September-2022.**

**முதல் விசாரணை:-**

நான் தற்பொழுது ஏற்காடு மஞ்சகுட்டை கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 22-8-2016 ம்தேதிநான் ஏற்காடு மாரமங்கலத்தில் உள்ள பெலாக்காடு தரப்பில் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்த போது அன்றைய தினம் பிற்பகல் 4-00 மணியளவில் நான் மாரமங்கலம் கிராமத்தில் ஆய்வுப்பணியில் இருந்தபோது ஏற்காடு சார்பு ஆய்வாளர் என்னை தொலைபேசியில் தொடர்பு கொண்டு மாரமங்கலத்தில் ஒரு கொலை நடந்து விட்டதாகவும்

விசாரணையின்போது உடன் இருக்குமாறும் கேட்டுக் கொண்டார். மாரமங்கலம் அரசு தொடக்கப் பள்ளிக்கு பின்புறம் குப்புசாமி என்பவரின் வீட்டிலிருந்து சுமார் 50 மீட்டர் துாரத்தில் விவசாய நிலத்தில் குப்புசாமியின் பிரேதம் கிடந்தது. நான் விசாரித்து பார்த்த போது பிரேதம் கிடந்த இடம் குப்புசாமியின் சகோதரர் மாணிக்கம் என்பவரின் அனுபவத்தில் இருந்த இடம் என்று தெரிந்து கொண்டேன். குப்புசாமியை ராஜாங்கம் என்கிற ராஜேந்திரன் துப்பாக்கியால் சுட்டு கொன்று விட்டதாக கேள்விப்பட்டேன். சடலத்தின் அருகில் இருந்த ஒரு கைக்கடிகாரம் மற்றும் ஒரு ஜோடி செருப்பு மற்றும் இரத்தம் படிந்த, இரத்தம் படியாத மண் ஆகியவற்றை ஆய்வாளர் எங்கள் முன்னிலையில் மகஜரில் கைப்பற்றினார். அந்த மகஜரில் நானும் எனது உதவியாளர் முரளியும் கையொப்பமிட்டோம். அந்த கைப்பற்றுதல் மகஜர் **அ.சா.ஆ 2.** அந்த கைக்கடிகாரம் **சா.பொ.1**. ஒரு ஜோடி செருப்பு **சா.பொ.2** வரிசை. பின்பு ஆய்வாளர் எங்கள் முன்னிலையில் சம்பவஇடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார். பார்வை மகஜர் **அ.சா.ஆ 3.** 24-8-2016 ம் தேதி காலை சுமார் 7-00 மணிக்கு போலிஸ் போன் பண்ணி ராஜாங்கம் என்ற ராஜேந்திரனை அரஸ்ட் பண்ணி விட்டோம். மாரமங்கலம் பஸ் ஸ்டாப்பிற்கு வருமாறு அழைத்தனர். நான் காலை சுமார் 9-00 மணியளவில் மாரமங்கலம் பஸ் ஸ்டாப்பிற்கு சென்றேன். எதிரி ராஜேந்திரனை அங்கு கைது செய்து வைத்திருந்தனர். ராஜேந்திரனுடன் நான் என் உதவியாளர் , ஆய்வாளர் ஆகியோர் கொலை நடந்த இடத்திற்கு

சென்றோம். அந்த இடத்திற்கு அருகில் துப்பாக்கியின் உடைந்த பாகம் மற்றும் பனியன் ஆகியவற்றை கைப்பற்றினார். அந்த மகஜர் **அ.சா.ஆ 4** ஆகும். துப்பாக்கியின் உடைந்த பாகம் **சா.பொ. 3**, துப்பாக்கியின் குழல் **சா.பொ.4.** இரத்தக்கறை படிந்த பனியன் **சா.பொ. 5.** பின்பு நாங்கள் காவல்

நிலையம் சென்றோம்., 25–8–2016 ம் தேதி போலிசார் அழைத்ததின் பேரில் தருமபுரி மாவட்டம் சாமியாபுரம் கூட்டு ரோடு பாப்பிரெட்டிப்பட்டிக்கு போலிசாருடன் சென்றோம். அங்கு சேகர் என்பவரை ஆய்வாளர் விசாரித்தார். சேகர் என்பவர் துப்பாக்கி சர்வீஸ் செய்யும் தொழில் செய்வதாக சொன்னார். சேகர் ராஜாங்கத்திற்கு துப்பாக்கியை ரூ 2000/– க்கு விற்றதாக சொன்னார். சேகர் தொழில் செய்யும் இடத்தை ஆய்வாளர் சோதனையிட்டபோது துப்பாக்கி மாதிரி கட்டை, சிறிய சுத்தியல், ஆக்ஸாபிளேடு, சிறிய கை ரம்பம், இரும்பு கரண்டி, பட்டை உளி, இரும்பு இழைப்புளி, துப்பாக்கி இரும்பு பேரல் ஆகியவற்றை ஆய்வாளர்மகஜரில் கைப்பற்றினார் . அந்த மகஜர் **அ.சா.ஆ 5**. துப்பாக்கி மாதிரி கட்டை **சா.பொ. 6**.சிறிய சுத்தியல், **சா.பொ. 7**.ஆக்ஸாபிளேடு **சா.பொ. 8**.சிறிய கை ரம்பம் **சா.பொ. 9**.இரும்பு கரண்டி, **சா.பொ. 10**. பட்டை உளி, **சா.பொ. 11**. இரும்பு இழைப்புளி, **சாபொ. 12**. துப்பாக்கி இரும்பு பேரல் **சா.பொ. 13**. ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

(குவிமுச பிரிவு 231 (2) ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு தள்ளுபடி செய்யப்பட்டது)

**Sd/- Thiyagarajan**

**Sd/- Tr. S.Jeganathan,**
**III ADJ (FAC) Salem.**

DEPOSITION OF WITNESS

(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT JUDGE (FAC), SALEM.

அமர்வு வழக்கு எண. 301/2017

அ. சா– 7

பெயர் :திருமதி. தீபா : கிராமம்

த/பெ. : திரு. தங்கராஜ்

: தொழில்

வயது :

: மதம்

: ஜாதி

திரு. S. ஜெகநாதன், B.A, B.L., D.C.A.C.J., முதலாவது கூடுதல் நீதிபதி (முழு கூடுதல் பொறுப்பு) அவர்கள், Solemnly affirmed by Thiru.P.K.Shanmugam, Translator of this court in accordance with the provisions of Oath Act 44/1969, this the 13th day of September–2022.

முதல் விசாரணை:–

நான் ஏற்காடு மாரமங்கலத்தில் குடியிருக்கிறேன். கூலி வேலை செய்கிறேன். இந்த வழக்கில் கொலையுண்டு இறந்து போன குப்புசாமி என் தகப்பனார். 1 வது எதிரி ராஜாங்கம் என் பெரியப்பா. 2 வது எதிரியை தெரியும். 2 வது எதிரி மனைவி சத்துணவில் வேலை செய்கிறார். 26–8–2016 ம் தேதி பிற்பகல் 1–30 மணியளவில் நான் என் தாயார் வீட்டில் இருந்தேன். என் பாட்டிக்கு சொந்தமான இடத்தில் என் தகப்பனார் விவசாயம் செய்து வந்தார். அப்பொழுது 1 வது எதிரி ராஜாங்கம் எங்கள் வீட்டிற்கு வந்து என் தகப்பனாரை வெளியே வாடா என்று சொன்னார்.

என் தகப்பனார் உயரமான இடத்தில் ஏறி சென்றார். அவ்வாறு என் தகப்பனார் சென்றவுடன் துப்பாக்கியால் சுடும் சத்தம் கேட்டது. நான் அந்த இடத்திற்கு ஓடி சென்ற போது 1 வது எதிரி ராஜாங்கம் வந்தால் உன்னையும் சுட்டு விடுவேன் என்று சொன்னார். நாங்கள் பயந்து கொண்டு கீழே நின்று விட்டோம். 1 வது எதிரி ராஜாங்கம் துப்பாக்கி கட்டையால் என் தகப்பனார் குப்புசாமியை தலையில் அடித்தார். முகத்தில் அடித்தார். துப்பாக்கியின் உடைந்துபோன பாகங்களை அள்ளிக்கொண்டு ஓடி விட்டார். 1 வது எதிரி ராஜாங்கம் என் தகப்பனாரின் இடது கால் தொடையில் துப்பாக்கியால் சுட்டார். இரத்தத்தை பார்ததவுடன் எனக்கு மயக்கம் வந்து விட்டது. இது சம்மந்தமாக என் தாயார் மாது காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

(குவிமுச பிரிவு 231 (2) ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு தள்ளுபடி செய்யப்பட்டது)

Sd/- Tmt.Deepa

Sd/- Tr.S.Jeganathan,
III ADJ (FAC) Salem.